Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
**C.C.No. 707/2005**

**Deposition of witness for: PW - 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | வெங்கடாச்சலம் | **Father/Husband Name** | : | பாடகலிங்கம் |
| **Age** | | | **Calling** | : | |
| **Date** | : | **14.07.2025** | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 14th day of July 2025.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது)**

**அரசுதரப்பில் முதல் விசாரணை**

நான் அரசு மருத்வராக பணிபுரிந்து ஒய்வு பெற்று மதுரையில் குடியிருந்து வருகிறேன். மேலூர் அரசு மருத்துவரக பணியில் இருந்தபோது 23.03.2005 அன்று இரவு 10.00 மணியளவில் திருவாதவூரை சேர்ந்த அருண் மனைவி லதா, 20 வயது, மேலூர் சார்வு ஆய்வாளரிடம் மருத்து நமுனா பெற்று சிகிச்சைக்காக வந்தார். நான் அவரை பரிசோதனை செய்தபோது அவர் தனக்கு தெரிந்த 5 நபர்கள் அன்று மாலை 04.00 மணியளவில் அவரது வீட்டில் வைத்து கம்பு, கைகள் மற்றும் கால்கள் கொண்டு தன்னை தாக்கியதாக கூறினார். நான் அவரை பரிசோதனை செய்தபோது அவர் தான் 5 மாத கர்பிணியாக இருப்பதாக கூறினார். அவரை பரிசோதித்தபோது அவருக்கு வயிற்றில் வலி இருப்பதாக கூறினார்.

1) அவரது இடது முன்கையில் 5 செ,மீ நீளத்தில் ஒரு சிராய்ப்பு காயம் இருந்தது.

2) 2 செ.மீ சுற்றளவில் வளது முன் கையில் ஒரு சிராய்ப்பு காயம் இருந்தது.

அவர் தனக்கு உடல் முழுவதும் வலி இருப்பதாக கூறினார். அவர் அன்றைய தினமே உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். மேற்படி அவருக்கு சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயங்கள் மற்றும் காயத்தின் தன்மை குறித்து சான்றழித்தேன். அந்த காயங்கள் சாதாராண காயம் என்று சான்று வழங்கினேன். ( **நான் வழங்கிய காயச்சான்றுக்ள அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ). பொதுவாக கம்பு, கை, மற்றும் கால்களால் ஒருவரை சுமார் 5 நபர்கள் சேர்ந்து தாக்கினால் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. இதுசம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்

எதிரிதரப்பு குறுக்குவிசாரணை

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்திலிருநது 6 மணி நேரம் கழித்துதான் காயம்பட்டவர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார் என்றால் சரிதான். பொதுவாக ஒருவர் காயம்பட்டவுடன் உடனடியாக சிகிச்சைக்கு வந்துவிடுவார் என்றால் சரிதான். மேற்கூறிய காயங்கள் கோவமாக ஒருவர் வீட்டை விட்டு செல்லும்போது சமாதானப்படுத்த கணவர் கையை பிடித்து இழுக்கும்போது அவர் உதறி செல்லும்போது அவ்வாறான காயங்கள் ஏற்படும் என்றால் சரிதான். உடலில் வலி என்று காயம்பட்டவர் பொய்யாக கூற இயலும் என்றால் சரிதான். காயம்பட்டவர் 5 மாதம் கர்ப்பமாக இருந்ததற்கு வேறு ஏதும் சிறப்பு பரிசோதனை செய்து உறுதிபடுத்தினேனா என்றால் அவர் வாய்மொழியாக என்னிடம் கூறினார்.